# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

## கிருஷ்ணகிரி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரி

| அமர்வு வழக்கு எண் | SC 197 of 2019 | அரசு தரப்பு | அ.சா.3 |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | எதிரி தரப்பு | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | பாண்டுரங்கன் | வயது | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | | |

**Solmnly affirmed in accordance with the provisions of Act X 1873 of 18th day of March 2024.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது பொள்ளாச்சியில் வசித்து வருகிறேன். நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை சரியாக ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்து 20 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. கடந்த 25.06.2001 அன்று பதிவு எண்.1771 கொண்ட எஸ்.எம்.பி. பேருந்தில் பரிசோதகராக சென்ற போது செங்கம் - கிருஷ்ணகிரி தடத்தில் மேட்டுதங்கலில் பயணிகளை இறக்கி விட்டு விட்டு சுமார் 2, 3 கி.மீ, பேருந்து சென்று கொண்டிருந்த போது சாலையின் இரு பக்கமும் இருந்து இரவு 8 மணி போல கற்கள் வீசியதில் பேருந்தின் இரு பக்கமும் கண்ணாடி மீது பட்டதில் கண்ணாடிகள் உடைந்தன. உடைந்த கண்ணாடி வழியாக தீ எறிந்தவாறு கீழே விழுந்தது. பேருந்து ஓட்டுநர் பேருந்தை நிறுத்தி விட்டார். பயணிகள் அலறியவாறு இறங்கி ஓடிவிட்டார்கள். நாங்களும் இறங்கிவிட்டோம். பக்கத்தில் இருந்த ஒரு வீட்டிற்கு சென்று

அங்கிருந்த போன் மூலம்கல்லாவி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தோம். போலீசார் வந்து எங்களை விசாரித்தார்கள். நாங்கள் காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்திலிருந்து பேருந்தின் உரிமையாளருக்கு தகவல் தெரிவித்தோம். இது சம்மந்தமாக ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை.

**மறுவிசாரணை:** இல்லை.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA

Principal District Judge
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Location: Krishnagiri

Principal Sessions Judge,
Krishnagiri.